viewed seriously. This will help not only the transport bus drivers, but every citizen of India. I am happy to note that crew rest rooms are to be upgraded so that the drivers could take proper rest before they take up their next trip. Improvements in road traffic signals and introduction of special incentives and rewards to drivers with accident free record for more than 10 years is a welcome step.

HON'BLE SPEAKER: Hon'ble Member may conclude her speech, please.

Dr. NANCY ANN CYNTHIA FRANCIS: One minute, Sir. Last but not the least, the most modern facility, the monitoring of bus movement by the global positioning system has been implemented in 550 vehicles and also the digital display boards have been installed in 51 bus stops. All this only goes to see that our Beloved Amma is striving to make Tamil Nadu, as I earlier said, a star State in this wonderful country. Thank you. (Thumping of desks).

பிற்பகல் 2—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 10—9—2011 சனிக்கிழமை அன்று பதிலுரை வழங்குவார்கள்.*

7. அரசினர் தீர்மானம்

விதி 32—ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *10—9—2011 சனிக்கிழமை அன்று வினாக்கள்—விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நான்சி அவர்கள் குறுக்கீடு இல்லாமல் பேசியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2011 செப்டம்பர் 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32—ஐ 10—9—2011 (சனிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

10—9—2011 (சனிக்கிழமை) அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

8. ஓணம் பண்டிகை—பேரவைத் தலைவரின் வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை ஓணம் பண்டிகையைக் கொண்டாடும் மலையாள மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, பேரவை உறுப்பினர்களின் வாழ்த்துகளோடு என் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10—9—2011 (சனிக்கிழமை) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.